பணிகள் செய்யும் சிப்பந்திகள், காவலர்கள் 100 பேருக்கும் மேலாக இங்கே வந்து தங்கிச் செல்வதற்கு சரியான தங்கும் வசதி இல்லையென்பதால், அவர்கள் தங்கிச் செல்ல தங்கும் விடுதி ஒன்றும், மண்டபமும் அமைத்துத்தர அரசு முன்வருமா எனத் தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எம்.எஸ்.எம். ஆனந்தன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறியதுபோல், அந்தத் திருக்கோயிலில் இடம் இருக்குமாயின், அங்கு வருகை தரும் பக்தர்களின் எண்ணிக்கைக்கேற்ப, மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்களின் கருணையான பார்வைக்கு எடுத்துச் சென்று, மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் கோரிக்கை பரிசீலிக்கப்படும் என மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திருமதி எஸ். விஜயதரணி அவர்கள்.

திருமதி எஸ். விஜயதரணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நடவடிக்கை எடுக்கப்படும் என்று தெரிவித்த மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களுக்கும், மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 497, மாண்புமிகு உறுப்பினர் திரு. கடம்பூர் ராஜு, மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள்.

497—

புதிய வட்டம்

***28114—திரு. கடம்பூர் ராஜு:**

மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கோவில்பட்டி தொகுதி, கயத்தாரை தலைமையிடமாகக் கொண்டு புதிய வட்டம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. என்.டி. வெங்கடாச்சலம், வருவாய்த் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பொற்பாதங்களை பணிவோடு வணங்குகிறேன். புதிய வட்டம் உருவாக்க நிர்ணயிக்கப்பட்ட அளவுகோல்களை நிறைவு செய்கின்ற காரணத்தினால், கோவில்பட்டி தொகுதி, கயத்தாரை தலைமையிடமாகக் கொண்டு புதிய வட்டம் அமைப்பது குறித்து முழுமையான செயற்குறிப்புகள் பெறப்பட்டவுடன், உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என மாண்புமிகு பேரவைத் தலைவர்வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. கடம்பூர் ராஜூ அவர்கள்.*

திரு. கடம்பூர் ராஜூ: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அட்சயப் பாத்திரமாக தினம், தினம் பல திட்டங்கள் தந்து, ஆற்றல் அரசியாக, அன்னைத் தமிழகத்தை அமைதிப் பூங்காவாக ஆட்சி செய்யும் எங்கள் மாண்புமிகு அம்மா அவர்களே, (மேசையைத் தட்டும் ஒலி) வளமான தமிழகத்திற்கு வளம் சேர்க்க தினம் உழைத்து, பன்மொழிப் புலமைப் பாங்குடன் பெற்று, பார் போற்றும் திட்டங்களை பைந்தமிழில் அறிவித்து, இன்றைய தமிழகத்தின் பொற்கால ஆட்சிபோல் பொன்னெழில் பாரதத்தை புகழ் காக்க இருக்கின்ற மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பொற்பாதங்களை பணிந்து வணங்குகின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)*

கோவில்பட்டி நகராட்சியில் 1½ இலட்சம் மக்களும், ஊராட்சிப் பகுதியில் 1½ இலட்சம் மக்களும், ஆக தொகுதி முழுவதும் 3 இலட்சம் மக்கள் வாழ்கின்ற பகுதி கோவில்பட்டி பகுதி என்பதை அரசின் கவனத்திற்கு எடுத்துச்சென்று, இந்த வினாவை எழுப்பி, வினா கேட்க இருந்த நேரத்தில், ஆவன செய்யப்படும் என்று அறிவித்த தமிழகத்தின் பொற்கால முதல்வர் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பொற்பாதம் பணிந்து வணங்கி, விரைவிலே, இந்த நடப்பாண்டிலேயே, இந்தத் திட்டம் துவங்கப்படுமா என மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் மாண்புமிகு பேரவைத் தலைவர்வாயிலாகக் கேட்டு அமைகின்றேன்.

2013 மே 14]

முற்பகல் 11–10

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. என்.டி. வெங்கடாச்சலம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு புதிய வட்டம் உருவாக்குவதற்கு அரசு நிர்ணயித்திருக்கின்ற அளவுகோல்களை மாண்புமிகு உறுப்பினர் சொன்ன பகுதி நிறைவு செய்கின்ற காரணத்தினாலே, தூத்துக்குடி மாவட்டம், கயத்தாரை தலைமையிடமாகக் கொண்டு புதிய வட்டம் ஏற்படுத்துவதற்கு உரிய முன்மொழிவுகள் பெறப்பட்டு, மாண்புமிகு முதல்வர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் மேலான கவனத்திற்கு எடுத்துச் சென்று, பரிசீலிக்கப்படும் என மாண்புமிகு பேரவைத் தலைவர்வாயிலாக மாண்புமிகு உறுப்பினருக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. கடம்பூர் ராஜூ அவர்கள்.*

திரு. கடம்பூர் ராஜூ: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தொகுதி மக்களின் நீண்ட காலக் கனவை நனவாக்கி, ஆவன செய்யப்படும் என்று உறுதியளித்த மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும், தமிழகத்தின் பொற்கால முதல்வர் மாண்புமிகு அம்மா அவர்களுக்கும் தொகுதி மக்கள், கார் உள்ளளவும், கடல் உள்ளளவும் நன்றிக்கடன்பட்டிருப்போம் என மாண்புமிகு பேரவைத் தலைவர்வாயிலாகச் சொல்லி, அமர்கின்றேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 498, மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. பாஸ்கர், மாண்புமிகு பள்ளிக் கல்வி, விளையாட்டுகள் மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.*

498—

பள்ளியைத் தரம் உயர்த்துதல்

***22760—திரு. அ. பாஸ்கர்:**

மாண்புமிகு பள்ளிக் கல்வி, விளையாட்டுகள் மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—